முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No.421/2023

Witness PW 1

பெயர் / பச்சையப்பன் (எ) வினாயகம்

**த.பெ - கணேசன்**

**இன்று (12.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை நான் படிக்காததால் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியம் ஆகியவைகளில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்னுடன் பிறந்தவர்கள் தம்பி அவர் பெயர் ராமலிங்கம் சகோதரிகள் இல்லை ராமலிங்கம் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் அவர் காலமாகிவிட்டார் எனக்கு தம்பி இருந்தார் அவர் பெயர் ராமலிங்கம் அவர் காலமாகிவிட்டார் என்ற விவரங்களை எனது வழக்குரையிலோ அல்லது முதன்மை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் நான் பட்டா பெற்றுள்ளேன் அந்த பட்டா எந்த அடிப்படையில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று விவரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் வேறு ஏதாவது பரிகாரம் கேட்டு உள்ளேன் என்றால் இல்லை வழக்கு சொத்து மொத்த விஸ்தீரணம் எண்பத்தி மூணு செண்ட் என்றால் சரிதான், எனது தந்தையார் பெயர் கணேசன் எனது அப்பாவுடன் பிறந்த அண்ணன் தம்பிகள் மற்றும் அக்கா தங்கைகள் எத்தனை பேர் என்றால் எனது அப்பாவுடன் பிறந்த அண்ணன் தம்பிகள் ஆறு நபர்கள் அக்கா தங்கைகள் எத்தனை என்று எனக்கு தெரியவில்லை எனது அப்பாவுடன் பிறந்த சகோதரர்கள் பெயர் கிருஷ்ணசாமிஇ செம்மநெறிஇ பழனி இதண்டபாணிஇ நடேசன் எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் ஆறு பேர் என்று எனது வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன் தற்சமயம் நான்கு பேர் உள்ளதாக சொல்லி உள்ளேன் எனது தகப்பனார் கணேசனின் அப்பா பெயர் முனுசாமி என்றால் சரிதான் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram